நிலங்கள் இருக்கக்கூடிய ஒரு நிலச்சுவான்தாரிடத்திலிருந்து மட்டும் மண்ணை எடுத்துக்கொண்டுபோய் அலுவலகத்தில் கொடுக்கிறார்கள். மண்வள ஆராய்ச்சிக் கூடத்திலுள்ள எந்த அதிகாரியும் வந்து மண்ணை எடுத்துப்போவதில்லை. ஆகவே இதிலுள்ள பயன் சரியாகத் தெரியவில்லை. ஆகவே இதற்கான அதிகாரிகளே நேரில் வந்து மண்ணை எடுத்துக் கொண்டு போவதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: அதிகாரிகள் ஒவ்வொரு இடத்திலும் மண்ணை எடுத்துக் கொண்டு இருக்க முடியாது. கிராம சேவக்குகள் எடுத்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் மூலமாக விவசாயிகளுக்குத் திரும்பி வந்து ரிசல்ட் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

திரு. அ. ராகவ ரெட்டி: சார், மண்ணை எடுத்துப் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டாலும் ஆராய்ச்சி நிலையத்திலிருந்து முடிவை விவசாயிகளுக்குச் சொல்வதோ அதற்கு தகுந்தவாறு உரம் போட வேண்டும் என்று சொல்லுகின்ற பழக்கமோ கிடையாது. ஆகவே மண்ணை எடுத்துக்கொண்டுபோனால் அதற்குப் பிறகு என்ன செய்யவேண்டும் என்று சொல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: மண்ணை எடுத்துக்கொண்டு போனால் நிச்சயமாக ரிசல்டைச் சொல்வார்கள் என்று நினைக்கிறேன். என்னிடத்தில் இருக்கின்ற தகவல்களின்படி, இம்மாதிரி மண் வள ஆராய்ச்சி ஏற்பட்டதின் காரணமாக 30 சத விகிதத்திலிருந்து 70 சத விகிதம் வரை அதிகமாக உற்பத்தியில் ஆதாயம் கிடைக்கிறது என்று தெரிகிறது. ஆகவே மண்ணைப் பரிசோதனைக்கு எடுத்துக்கொண்டு போகிறவர்கள் திரும்பி வந்து ரிசல்ட்டை சொல்வதில்லை என்று சொல்வது சரியல்ல. அப்படி ஏதாவது அவர்கள் சொல்லாமல் இருந்தாலும் விவசாயிகள் சும்மா இருந்து விடக்கூடாது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Lands for Bhoodan Yagna

* 390 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Home be pleased to state :

(*a*) the extent of lands contributed to Bhoodan Yagna in the State: and

(*b*) the extent distributed to the landless in the State?

THE HON. SRI P. KAKKAN : **(*a*) 51,332 acres.**

(*b*) **17,286 acres.**

(அ) 51,332 ஏக்கர்கள்.

0–30 a.m. (இ) 17,286 ஏக்கர்கள்.

திரு. எம். வி. கரிவேங்கடம்: தலைவர் அவர்களே, 51,000 ஏக்கரில் 17,000 ஏக்கர்தான் நிலமற்ற விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீதி நிலங்கள் விவசாயத்திற்கு லாயக்கு அற்ற நிலங்களா, அதனால்தான் கொடுக்கப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

31st March 1965]

கனம் திரு. பூ. கக்கன் : சில இடங்களில் லாயக்கில்லாததும் இருக்கின்றன. சில இடங்களில் இப்போது கமிட்டிகள் அமைத்து, அந்தந்த வட்டாரத்திலே இருக்கிற லோக்கல் கமிட்டிகள் பகிர்ந்து கொடுத்துக்கொண்டு வருகிறார்கள். அதிலே துரிதமாகச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்பட்டு வருகின்றன. சில இடங்களில் நிலங்கள் இருந்தாலும் அந்த நிலங்களைக் கேட்க யாரும் முன் வரவில்லை. கிடைத்திருக்கிற நிலங்களில் பெரும் பகுதி நல்ல நிலங்களாக இருப்பதால்தான் நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. லாயக்கு இல்லாத நிலங்களும் இருக்கின்றன.

உப்பு உற்பத்தி

*391 கேள்வி.—**திரு. கே. ஏ. மதியழகன்** : கனம் **உணவு** அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழகக் கடற்கரைப் பகுதிகளில் உப்புத் தயாரிப்பதற்கான சர்வே ஏதேனும் செய்யப்பட்டதா ?

(இ) ஆம் எனில், விவரம் என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : (அ) ஆம்.

(இ) 1962-ல் உப்புத் தயாரிப்பதற்கும் ஏற்ற நிலங்களைப்பற்றித் தோராயமாக சர்வே செய்யப்பட்டது. இந்த மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தைத் தவிர்த்து, சுமார் 9,500 ஏக்கர் நிலம் உப்புத் தயாரிப்பதற்குக் கிடைக்குமென்று தெரிந்தது.

திரு. எம். எஸ். செல்வராஜன் : ஸார், இந்த ராஜ்யத்தில் உற்பத்தி ஆகக் கூடிய மொத்த உப்பின் அளவு என்ன என்று அறிய முடியுமா ? உள்நாட்டுத் தேவைக்கும் வெளிநாட்டு ஏற்றுமதிக்கும் போக ஏராளமான உப்பு தேங்கிக் கிடக்கிறது என்று அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? இந்தச் சிக்கலைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அல்லது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : The current production is 7.7 lakhs tons per annum. இன்னும் 12 லட்சமாகக்கூட ஆக்க முடியும். மூன்றாவது திட்டத்தில் அந்த அளவுக்கு ஆக்கவேண்டுமென்று திட்டம். உப்பு தேங்கி இருக்கிறதா இல்லையா என்ற விவரம் என்னிடத்தில் இல்லை. அது சம்பந்தமாக கனம் அங்கத்தினர் எழுதி அனுப்பினால் கவனிக்கலாம்.

திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, சர்வே செய்தபோது தரங்கம்பாடி, காவிரிப் பட்டணம் பகுதியில் உப்பு உற்பத்தி செய்யத் தகுதியான இடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்களா ? அதன் மீது எடுத்த முடிவு என்ன ?

கனம் திரு. வெ. ராமையா : தஞ்சாவூரில் சர்வே செய்திருக்கிறார்கள். பட்டுக்கோட்டை கடற்கரைப் பகுதியில்508.50 ஏக்கர், நாகப்பட்டணம் பகுதியில் 385.07 ஏக்கர், மாயூரம் பகுதியில் 42.26 ஏக்கர் இருப்பதாக அவர்கள் தகவல் சொல்லியிருக்கிறார்கள்.